முழுப் பதிப்புரிமையுடையது.

SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

மட்டம் II பரீட்சை – 2026 சனவரி

(201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

(Advanced Financial Accounting & Costing)

2026-02-07
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 11
வினாக்கள் : 07

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):
  - (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
    விடையெழுத : 03 மணித்தியாலங்கள்
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***
  - (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*
  - (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*
  - (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  - (6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (7) *100 புள்ளிகள்.*

<u>பகுதி A</u>

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 25 புள்ளிகள்)

வினா 01

*இல. **1.1** இலிருந்து **1.5** வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

1.1 **வரையறுக்கப்பட்ட ஆன் கம்பனி** 2023 சனவரி 01 இல் ரூ. 2,500,000/- கிரயத்தில் இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்தது. இயந்திரத்தின் எதிர்பார்க்கப்பட்ட பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும். 5 ஆவது ஆண்டின் இறுதியில் ஒழிவுப் பெறுமதி ரூ. 500,000/- ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இயந்திரமானது கிரயத்தில், நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானஞ் செய்யப்படுகிறது. 2025 மார்ச் 31 இல் இயந்திரத்தின் கொண்டுசெல்லல் பெறுமதி (carrying value):

(1) ரூ. 1,500,000/-. (2) ரூ. 1,600,000/-. (3) ரூ. 1,375,000/-. (4) ரூ. 1,100,000/-.

(02 புள்ளிகள்)

1.2 நிதியாண்டு அறிக்கையிடல் திகதிக்கும் (2025 மார்ச் 31) நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்காக அதிகாரமளிக்கப்பட்ட திகதிக்கும் (2025 மே 15) இடைப்பட்ட காலப்பகுதியில் இடம்பெற்ற பின்வரும் நிகழ்வுகளைக் கருதுக. LKAS 10 – அறிக்கையிடல் காலப்பகுதிக்குப் பின்னரான நிகழ்வுகள் என்ற நியமத்தின்படி, பின்வருவனவற்றில் எது சீராக்கல் (adjusting) நிகழ்வாகும்?

(1) 2025 மார்ச் 31 இல் பணம் தர வேண்டிய வாடிக்கையாளர் ஒருவர் 2025 ஏப்ரல் 05 இல் வக்கற்றவராக (bankrupt) அறிவிக்கப்பட்டார்.

(2) 2025 ஏப்ரல் 02 இல் ஏற்பட்ட தீ விபத்தினால் ஒரு பெரிய உற்பத்திப் பொறி அழிவடைந்தது.

(3) 2025 மே 15 இல் ஒரு பெரிய பங்கு வழங்கலின் அறிவிப்பு.

(4) 2025 ஏப்ரல் 18 இல் ஒரு முதலீட்டின் சந்தைப் பெறுமதியில் குறைவு ஏற்படல். (02 புள்ளிகள்)

1.3 2025 டிசெம்பர் மாதத்துடன் தொடர்புடைய பின்வரும் தொகைகள் **வரையறுக்கப்பட்ட ராணா கம்பனியின்** கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

	ரூ.
மொத்தச் சம்பளம்	7,800,000
முற்பண தனியாள் வருமான வரி (APIT)	660,000

கம்பனியானது ஊழியரின் மொத்தச் சம்பளத்தில் 12% இற்குச் சமமான தொகையை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF), 3% இற்குச் சமமான தொகையை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (EPF) பங்களிப்புச் செய்கின்ற அதே வேளை EPF இற்கான ஊழியரின் பங்களிப்பு 8% ஆகும்.

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2025 டிசெம்பர் மாதத்திற்கான நிகரச் சம்பளம் :

(1) ரூ. 5,911,000/-. (2) ரூ. 7,140,000/-.

(3) ரூ. 5,340,000/-. (4) ரூ. 6,516,000/-. (02 புள்ளிகள்)

1.4 **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனி** இரண்டு கட்டடங்களை வாடகைக்குப் பெற்றுள்ளது. 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில், கம்பனி ரூ. 2,400,000/- இனை வாடகையாகச் செலுத்தியுள்ளது.

பின்வரும் மீதிகள் **வரையறுக்கப்பட்ட XYZ கம்பனியின்** கணக்கேடுகளில் காணப்பட்டன :

(ரூ.)

	2025 மார்ச் 31 இல்	**2024 ஏப்ரல் 01 இல்**
செலுத்த வேண்டிய வாடகை	240,000	180,000
முன்கூட்டியே செலுத்தப்பட்ட வாடகை	175,000	225,000

2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சரியான வாடகைச் செலவினம் :

(1) ரூ. 2,510,000/-. (2) ரூ. 2,290,000/-.

(3) ரூ. 2,400,000/-. (4) ரூ. 2,625,000/-. (02 புள்ளிகள்)

1.5 பின்வரும் தகவல்கள் **மார்க் பீலிச்** இன் **பொருள் A** தொடர்பில் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

உயர்ந்தபட்சப் பாவனை	400 kg
குறைந்தபட்சப் பாவனை	200 kg
காத்திருப்புக் காலம் (Lead time)	2 - 6 மாதங்கள்
மறு-கட்டளைக் கணியம்	1,500 kg

பொருள் A இன் மறு – கட்டளை மட்டம் (Re-order level) :

(1) 400 kg. (2) 800 kg. (3) 1,200 kg. (4) 2,400 kg.

(02 புள்ளிகள்)

1.6 *தொடக்கம்* **1.10** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக*

1.6 நிதிக் கூற்றுக்களின் இரண்டு (02) பகுதிகளை (components) அடையாளங் காண்க. (02 புள்ளிகள்)

1.7 நேர வீத ஊதிய முறைமை ஒன்றின் மூன்று (03) அனுகூலங்களைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

1.8 1890 ஆம் ஆண்டின் பங்குடமைக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 24 இன் மூன்று (03) ஏற்பாடுகளைக் குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

1.9 **வரையறுக்கப்பட்ட சினேஜி (தனியார்) கம்பனி,** பெறுமதி சேர் வரிக்குப் (VAT) பதிவு செய்யப்பட்ட ஒரு கம்பனி ஆகும். பின்வரும் தகவல்கள் 2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த காலாண்டுடன் தொடர்புடையதாகும் :

	ரூ.
2025 அக்டோபர் 01 இல் VAT கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவு மீதி	52,500
விற்பனைகள் (VAT உள்ளடக்கப்படாத)	1,200,000
கொள்வனவுகள் (VAT உள்ளடக்கப்படாத)	550,000
விற்பனைத் திரும்பல்கள் (VAT உள்ளடக்கப்படாத)	65,000

(அனைத்து கொள்வனவுகளும் விற்பனைகளும் வரி விபரப்பட்டியல்களால் ஆதரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் பொருத்தமான VAT வீதம் 18% ஆகும்.)

மேற்படி தகவல்களின் அடிப்படையில்,

2025 டிசெம்பர் 31 இல் செலுத்த வேண்டிய VAT கணக்கு மீதியைக் கணிக்குக. (03 புள்ளிகள்)

1.10 பின்வரும் தகவல்கள் **வரையறுக்கப்பட்ட லங்கா கம்பனியின் பணி இல. 205** தொடர்பாகப் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

நேர் பொருள்	ஒரு கிலோகிராமுக்கு ரூ.150/- வீதம் 150 கிலோகிராம்கள்
நேர் கூலி	ஒரு மணித்தியாலத்திற்கு ரூ. 600/- வீதம் 75 மணித்தியாலங்கள்
உற்பத்தி மேந்தலைகள்- திணைக்களம் Q	நேர் கூலிக் கிரயத்தில் 150%.
– திணைக்களம் R	நேர் கூலிக் கிரயத்தில் 60%

கம்பனியானது விற்பனை விலையில் 20% இலாபத்தைப் பேணுகிறது.

பணி இல. 205 இன் மீது வசூலிக்கப்பட வேண்டிய விலையைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி A முடிவு

பகுதி B

(மொத்தம் 50 புள்ளிகள்)

வினா 02

திலக் என்பவர் ரூ. 2,000,000/- இனை காசாக முதலீடு செய்து, 2024 சனவரி 01 இல் **திலக் கேட்டரிங்** என்ற பெயரில் வெளிப்புற கேட்டரிங் சேவைகள் வணிகத்தை ஆரம்பித்தார்.

எவ்வாறாயினும், அவர் முறையான கணக்கேடுகளைப் பேணவில்லை என்பதுடன், 2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் தகவல்கள் வணிகத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

(1) வணிகத்தின் பிற சொத்துக்களும் பரிப்புக்களும் பின்வருமாறு : (ரூ.)

இல்	2025 டிசெம்பர் 31	2025 சனவரி 01
இயந்திரம் - கொண்டுசெல்லல் பெறுமதியில் (at carrying value)	1,800,000	2,200,000
வியாபாரக் கடன்பட்டோர்	670,000	480,000
இருப்புகள்	17,500	16,300
காசு மற்றும் வங்கி மீதிகள்	?	1,530,000
வியாபாரக் கடன்கொடுத்தோர்	720,000	630,000
அட்டுறு மின்சாரமும் நீரும்	5,300	6,200

(2) 2025 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் ஆதனம், பொறி மற்றும் உபகரணக் கொள்வனவுகளோ அல்லது விற்பனைகளோ இல்லை.

(3) அனைத்து விற்பனைகளும் கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் செய்யப்பட்டதுடன் ஆண்டின் காலப்பகுதியில் செய்யப்பட்ட கொள்வனவுகளின் பெறுமதி ரூ. 3,200,000/- ஆகும். 2025 ஆம் ஆண்டின் காலப்பகுதியில் வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட தொகை ரூ.9,600,000/- ஆக இருந்தது.

(4) ஆரம்பத்தில், வணிகமானது **திலக்கினுடைய** வீட்டில் நடத்தப்பட்டதுடன், வணிக விரிவாக்கத்தின் விளைவாக அது 2025 யூலை 01 இலிருந்து வாடகைக்குப் பெறப்பட்ட வளாகத்திற்கு மாற்றப்பட்டது. 2025 யூலை 01 இல் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் வேளையில் இரண்டு ஆண்டுகளின் வாடகையாக ரூ. 720,000/- கொடுப்பனவு செய்யப்பட்டது.

(5) ஆண்டின் காலப்பகுதியில், மின்சாரம் மற்றும் நீருக்காகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் ரூ. 96,000/- ஆகும்.

(6) இரண்டு முழு நேர ஊழியர்கள் வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு ஊழியரும் மாதாந்தச் சம்பளம் ரூ. 60,000/- இற்கு உரித்துடையவராக உள்ளனர். சம்பளத்திற்கு மேலதிகமாக ஆண்டின் காலப்பகுதியில் வியாபாரக் கடன்பட்டோரிடமிருந்து சேகரிக்கப்பட்ட காசில் 10% ஊக்கத் தொகை ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்டது.

நீங்கள் செய்ய வேண்டியவை :

திலக் கேட்டரிங் இற்காக பின்வருவனவற்றைக் **கணிக்குக** :

(a) 2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிகர இலாபம். (07 புள்ளிகள்)

(b) 2025 டிசெம்பர் 31 இலான மூலதன (உரிமையாண்மை) மீதி. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 03

ஹிலான், நிலான் மற்றும் **டிலான்** ஆகியோர் **HND அசோசியேட்ஸ்** இன் பங்காளர்கள் ஆவர்.

(1) பங்குடமை உடன்படிக்கை பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது :

- **ஹிலான், நிலான், டிலான்** ஆகியோருக்கிடையில் இலாப, நட்டங்கள் முறையே 2 : 2 : 1 என்ற விகிதத்தில் பகிரப்படுகின்றன.
- பங்காளர்கள் 2025 சனவரி 01 இல் இருந்த ஆரம்ப மூலதனக் கணக்கு மீதிகளுக்கு, ஆண்டிற்கு 10% வட்டியைப் பெற உரித்துடையவர்கள்.
- **டிலான்** பங்குடமையை முகாமை செய்வதற்காக மாதாந்தச் சம்பளமாக ரூ. 25,000/- பெற உரித்துடையவர்.

(2) பின்வரும் மீதிகள் 2025 சனவரி 01 இலான பங்குடமையின் கணக்கேடுகளில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன: *(ரூ.'000)*

	வரவு	செலவு
மூலதனக் கணக்கு மீதிகள் :		
ஹிலான்		8,000
நிலான்		8,000
டிலான்		4,000
நடைமுறைக் கணக்கு மீதிகள்:		
ஹிலான்	200	
நிலான்		800
டிலான்	200	

(3) 2025 டிசெம்பர் 31 இல், **டிலான்** பங்குடமையிலிருந்து விலகத் தீர்மானித்ததுடன் **ஹிலானும் நிலானும்** இலாப, நட்டங்களைச் சமமாகப் பகிர்ந்து கொண்டு, அதே பெயரில் பங்குடமையைத் தொடர்ந்து நடத்த உடன்பட்டுள்ளனர். அந்தத் திகதியில், பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 3,000,000/- என மதிப்பிடப்பட்டது. நன்மதிப்புக் கணக்கொன்றை உருவாக்காது பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் ஊடாக நன்மதிப்பைச் சீராக்கம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

(4) பங்குடமையின் நடைமுறையல்லாச் சொத்துக்கள் 2025 டிசெம்பர் 31 இல் பின்வருமாறு மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன : *(ரூ.'000)*

	கிரயம்	2025 டிசெம்பர் 31 இல் திரண்ட தேய்மானம்	2025 டிசெம்பர் 31 இல் மீள்மதிப்பீட்டுத் தொகை
காணியும் கட்டடமும்	6,000	200	6,500
மோட்டார் வாகனங்கள்	2,000	500	2,600

நடைமுறையல்லாச் சொத்துக்கள், பங்காளர்களின் கணக்கேடுகளில் மீள்மதிப்பீட்டுத் தொகைகளில் பேணப்பட வேண்டுமென இணங்கிக் கொள்ளப்பட்டது.

(5) 2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பங்குடமையின் நிகர இலாபம் ரூ. 3,190,000/-.

நீங்கள் செய்ய வேண்டியவை :

2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **HND அசோசியேற்ஸ்** இன் பின்வருவனவற்றைத் **தயாரிக்குக:**

(a) பங்காளர்களின் மூலதனக் கணக்குகள் (05 புள்ளிகள்)

(b) பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகள் (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 04

ஹமில்டன் பீஎல்சீ என்பது ஓர் ஆடை தயாரிப்பு நிறுவனம் ஆகும். இது தனது ஊழியர்களின் நன்மைக்காக '**ஹமில்டன் நலன்புரிச் சங்கம்**' என்ற பெயரில் ஊழியர்களின் நலன்புரிச் சங்கம் ஒன்றை உருவாக்கியுள்ளது.

ஹமில்டன் நலன்புரிச் சங்கம் முறையான கணக்கீட்டுப் பதிவுகளைப் பேணவில்லை. எவ்வாறெனினும், **ஹமில்டன் நலன்புரிச் சங்கத்தின்** கணக்கேடுகளில் இருந்து பின்வரும் தகவல்களைத் திரட்டக்கூடியதாக இருந்தது :

(1) 2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ஹமில்டன் நலன்புரிச் சங்கத்தின்** பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் விபரங்கள் பின்வருமாறு :

பெறுவனவுகள்:	**ரூ.**
கிடைக்கப்பெற்ற அங்கத்தவர் சந்தாக்கள்	2,440,000
நத்தார் கொண்டாட்டத்திற்காக **ஹமில்டன் பீஎல்சீ** இடமிருந்து கிடைக்கப்பெற்ற பங்களிப்பு	1,100,000
நத்தார் கொண்டாட்டத்திற்காக அங்கத்தவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட தொகை	900,000
நத்தார் கொண்டாட்டத்திற்காகக் கிடைக்கப்பெற்ற அனுசரணைகள்	750,000
கொடுப்பனவுகள்:	
அங்கத்தவர் குடும்பங்களின் மரணச் செலவுகளுக்கானது	20,000
அங்கத்தவர்களின் திருமண வைபவங்களுக்கானது	50,000
ஹோட்டல் கட்டணங்கள் (நத்தார் கொண்டாட்டம்)	1,950,000
இசை நிகழ்ச்சி (நத்தார் கொண்டாட்டம்)	75,000
நத்தார் கொண்டாட்டத்தின் பரிசுப் பொருள்கள்	120,000
அச்சிடல் மற்றும் காகிதாதிச் செலவினங்கள்	52,000
மடிக்கணினிக் கொள்வனவு	200,000

(2) 2025 சனவரி 01 இல் சங்கத்தின் காசு மற்றும் வங்கி மீதி ரூ. 3,500,000/- ஆக இருந்தது. நிலையான வைப்புகளிலிருந்து ஆண்டின் காலப்பகுதியில் ரூ. 230,000/- வட்டி வருமானம் ஈட்டப்பட்டது.

(3) ஒரு மாதத்திற்கான அங்கத்துவச் சந்தா ரூ. 1,000/- ஆகும். 2025 சனவரி 01 இல், 5 அங்கத்தவர்கள் 2024 ஆம் ஆண்டின் 2 மாதங்களுக்கான அவர்களுடைய சந்தாக் கட்டணங்களைச் செலுத்தியிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2025 சனவரி 01 இல் நிலுவையாக இருந்த அந்தச் சந்தாக் கட்டணங்கள் 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செலுத்தி முடிக்கப்பட்டன. மேலும், 15 அங்கத்தவர்கள் 2025 சனவரி மாதத்திற்கான அங்கத்துவச் சந்தாக் கட்டணங்களை 2024 டிசெம்பரில் செலுத்தியிருந்தனர்.

(4) 25 அங்கத்தவர்கள் 2026 சனவரி மாதத்திற்கான தமது அங்கத்துவச் சந்தாக் கட்டணங்களை முன்கூட்டியே 2025 டிசெம்பர் மாதத்தில் செலுத்தியிருந்தனர்.

(5) 2025 சனவரி 01 இல், சங்கத்தில் 200 அங்கத்தவர்கள் இருந்ததுடன், 2025 டிசெம்பர் காலப்பகுதியில் 20 புதிய அங்கத்தவர்கள் அங்கத்துவச் சந்தாக் கட்டணங்களைச் செலுத்தி, சங்கத்தில் இணைந்து கொண்டனர்.

(6) **ஹமில்டன் நலன்புரிச் சங்கம்** 2025 யூலை 01 இல் மடிக்கணினி ஒன்றைக் கொள்வனவு செய்தது. இந்த மடிக்கணினியின் பயன்தரும் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

(7) 2025 ஆம் ஆண்டு காலப்பகுதியில், **ஹமில்டன் நலன்புரிச் சங்கம்** நத்தார் கொண்டாட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்ததுடன் 20% ஆன அச்சிடல் மற்றும் காகிதாதிகள் செலவுகள் நத்தார் கொண்டாட்டத்துடன் தொடர்புடையதாக உள்ளன.

நீங்கள் செய்ய வேண்டியவை :

2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **ஹமில்டன் நலன்புரிச் சங்கத்தின்** பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) அங்கத்தவர்களின் சந்தாக் கணக்கு. (04 புள்ளிகள்)

(b) வருமான, செலவினக் கணக்கு. (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 05

(a) பின்வரும் விபரங்கள் 2025 மார்ச் மாதத்திற்கான **பொருள் Y002** தொடர்பில் **வரையறுக்கப்பட்ட துஷார (தனியார்) கம்பனில்** இருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

திகதி	விபரம்	அளவு (அலகுகளில்)	அலகு விலை (ரூ.)
01.03.2025	ஆரம்ப மீதி	4,000	50
05.03.2025	கொள்வனவுகள்	5,000	47
11.03.2025	விநியோகம்	2,600	-
19.03.2025	கொள்வனவுகள	3,000	52

நீங்கள் செய்ய வேண்டியது :

2025 மார்ச் மாதத்திற்காக, எடையேற்றிய சராசரிக் கிரய (AVCO) முறையைப் பயன்படுத்தி **பொருள் Y002** இற்கான இருப்புப் பேரேட்டைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட சன்ஷைன் (தனியார்) கம்பனி** ஒருங்கிணைக்கப்படாத கணக்கீட்டு முறைமையைப் பேணுகிறது. 2025 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான கிரயக் கணக்குகளில் காட்டப்பட்ட இலாபம் ரூ. 220,800/- ஆகும். அதேவேளை நிதிக் கணக்குகளின்படியான இலாபம் ரூ. 244,800/- ஆக இருந்தது.

வேறுபாட்டிற்கான காரணங்கள் பின்வருமாறு :

(1) இருப்பு மதிப்பீடு: (ரூ.)

	கிரயக் கணக்குகளின்படி	நிதிக் கணக்குகளின்படி
ஆரம்ப இருப்பு	225,000	216,000
இறுதி இருப்பு	195,000	208,000

(2) மற்றுமொரு கம்பனியில் இருந்து கிடைக்கப்பெற்ற பங்கிலாப வருமானம் ரூ. 18,000/- ஆனது நிதிக் கணக்குகளில் மாத்திரம் பதிவு செய்யப்பட்டது.

(3) சட்டச் செலவுகள் ரூ. 21,000/- ஆனது நிதிக் கணக்குகளில் தாக்கல் செய்யப்பட்டது எனினும் கிரயக் கணக்குகளில் பதிவு செய்யப்படவில்லை.

(4) கிரயக் கணக்குகளின்படி தொழிற்சாலை மேந்தலைக் கிரயங்கள் ரூ. 620,000/- ஆக இருந்த அதே வேளை அவை நிதிக் கணக்குகளில் ரூ. 615,000/- ஆகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

நீங்கள் செய்ய வேண்டியது :

நிதிக் கணக்குகளுக்கும் கிரயக் கணக்குகளுக்கும் இடையிலான இலாப இணக்கக் கூற்றைத் (profit reconciliation statement) **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

வினா 06

(a) ஓர் உற்பத்திக் கம்பனியான **வரையறுக்கப்பட்ட ஸ்மார்ட் (தனியார்) கம்பனி** இரண்டு (2) உற்பத்தித் திணைக்களங்களையும் (A, B), ஒரு (1) சேவைத் திணைக்களத்தையும் (C) கொண்டுள்ளது.

(1) கம்பனி பின்வரும் உற்பத்தி மேந்தலைக் கிரயங்களைப் பின்வருமாறு மதிப்பிட்டுள்ளது :

கிரய உருப்படி	(ரூ.)
இயந்திரத் தேய்மானம்	1,800,000
வாடகை	600,000
மின்சாரம்	900,000
தரக் கட்டுப்பாட்டுச் செலவினங்கள்	450,000

(2) உங்களுக்குக் கீழ்வரும் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

அடிப்படை	உற்பத்தித் திணைக்களங்கள்		சேவைத் திணைக்களம்	மொத்தம்
	திணைக்களம் A	திணைக்களம் B	திணைக்களம் C	
நேரில் பொருள் (ரூ.'000)	360	270	180	810
இயந்திரப் பெறுமதி (ரூ.'000)	1,500	2,500	500	4,500
தரைப் பரப்பு (சதுர அடி)	500	300	400	1,200
மின்சாரப் பாவனை (கிலோவாற்று)	400	300	200	900
தரப் பரிசோதனைகளின் எண்ணிக்கை	20	10	15	45
கிரயப் பகிர்வு – **திணைக்களம் C**	65%	35%	-	-

நீங்கள் செய்ய வேண்டியது :

மேந்தலைகள் ஒவ்வொரு உற்பத்தித் திணைக்களத்திற்கும் எவ்வாறு ஒதுக்கப்பட்டு, பகிரப்படுகின்றன என்பதைக் காட்டும் ஒரு கூற்றைத் **தயாரிக்குக.** (07 புள்ளிகள்)

(b) பின்வரும் தகவல்கள் **பொருள் C005** தொடர்பில் **வரையறுக்கப்பட்ட சிலோன் குளோத்திங் (தனியார்) கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

அலகொன்றின் கொள்வனவு விலை	ரூ. 120/-
அலகொன்றின் வருடாந்த நிறுத்திவைத்தல் கிரயம்	கொள்வனவு விலையில் 10%
வருடாந்தக் கேள்வி	ஆண்டிற்கு 100,000 அலகுகள்
கட்டளையிடற் கிரயம்	ஒரு கட்டளைக்கு ரூ. 34,560/-

மேற்படி தகவல்களின் அடிப்படையில், **பொருள் C005** இன் சிக்கனக் கட்டளைக் கணியத்தைக் (EOQ) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

பகுதி B முடிவு

பகுதி C

(மொத்தம் 25 புள்ளிகள்)

வினா 07

2025 மார்ச் 31 இலான **வரையறுக்கப்பட்ட ஏசியா (தனியார்) கம்பனி**யின் பரீட்சை மீதி பின்வருமாறு:

(ரூ.)

	வரவு	செலவு
குறிப்பிடு மூலதனம் (1,000,000 சாதாரண பங்குகள்)		22,000,000
2024 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம்		5,670,000
பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில்:		
மோட்டார் வாகனங்கள்	19,500,000	
அலுவலக உபகரணம்	2,550,000	
2024 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம்:		
மோட்டார் வாகனங்கள்		6,000,000
அலுவலக உபகரணம்		1,020,000
கையிலும் வங்கியிலும் உள்ள காசு	10,410,910	
வியாபார வருமதிகள்/ வியாபார சென்மதிகள்	16,037,000	1,225,000
2024 ஏப்ரல் 01 இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகை		1,500,000
விற்பனைகள்		42,040,000
விற்பனைக் கிரயம்	16,770,000	
செலுத்திய அலுவலக வாடகை	1,233,000	
பயண மற்றும் போக்குவரத்துச் செலவினங்கள்	432,250	
விளம்பரப்படுத்தல் மற்றும் சந்தைப்படுத்தல் செலவினங்கள்	725,300	
விற்பனைத் தரகு	1,006,200	
நீர் மற்றும் மின்சாரம்	338,000	
2025 மார்ச் 31 இல் இருப்பு – கிரயத்தில்	6,500,000	
சம்பளங்கள், EPF மற்றும் ETF	7,038,600	
வங்கிக் கட்டணங்கள்	12,250	
பிற நிருவாகச் செலவினங்கள்	89,240	
செலுத்திய வருமான வரி	825,000	
செலுத்த வேண்டிய EPF மற்றும் ETF		12,750
மோட்டார் வாகன அகற்றல் கணக்கு		4,000,000
	83,467,750	**83,467,750**

பின்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன:

(1) 2025 மார்ச் 31 இல் இருப்புகளின் நிகர தேறத்தக்க பெறுமதி (NRV) ரூ. 5,950,000/- ஆகும்.

(2) 2025 சனவரி 01 இல், கம்பனியால் ரூ. 137,000/- மாதாந்த வாடகையில் 3 ஆண்டுகளுக்கு, ஓர் அலுவலகக் கட்டடம் வாடகைக்கு எடுக்கப்பட்டது. மாதாந்த வாடகைக்கு மேலதிகமாக, ஆண்டின் காலப்பகுதியில் 6 மாதங்களுக்கான வாடகையானது முன்கூட்டியே செலுத்தப்பட்டுள்ளது. கம்பனியானது வாடகைகளுடன் தொடர்புடைய அனைத்துக் கொடுப்பனவுகளையும், செலுத்திய அலுவலக வாடகைக் கணக்கிற்கு வரவு வைத்துள்ளது.

(3) 2025 மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டணப் பட்டியல் ரூ. 27,500/- ஆகும். இது இன்னும் கணக்கிற் கொள்ளப்படவில்லை.

(4) பொறி மற்றும் உபகரணமானது கிரயத்தில் நேர்கோட்டு முறையில் தேய்மானஞ் செய்யப்பட வேண்டும். பொறி மற்றும் உபகரணத்தின் பயன்தரும் ஆயுட்காலம் பின்வருமாறு :

மோட்டார் வாகனங்கள்	4 ஆண்டுகள்
அலுவலக உபகரணம்	5 ஆண்டுகள்

(5) 2024 சனவரி 01 இல் ரூ. 3,600,000/- இற்குக் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு மோட்டார் வாகனம் 2025 சனவரி 01 இல் ரூ. 4,000,000/- இற்கு விற்கப்பட்டது. அகற்றல் மீதான விற்பனை வருமானம் மோட்டார் வாகன அகற்றல் கணக்கிற்குச் செலவுப் பதிவு செய்யப்பட்டது. இதைத் தவிர மோட்டார் வாகன அகற்றல் தொடர்பில் வேறெந்தப் பதிவுகளும் செய்யப்படவில்லை. கம்பனி அதே தினத்தில் ஒரு புதிய மோட்டார் வாகனத்தை ரூ. 7,500,000/- இற்குக் கொள்வனவு செய்தது. இது மோட்டார் வாகனக் கணக்கில் சரியாக வரவுப்பதிவு செய்யப்பட்டது.

(6) வரி மதிப்பாண்டு 2024/25 இற்கான வருமான வரிப் பொறுப்பு ரூ. 1,528,000/- ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டது. கம்பனி, ஆண்டின் காலப்பகுதியில் காலாண்டு வருமான வரித் தவணைக் கட்டணங்களாக ரூ. 825,000/- ஐச் செலுத்தியுள்ளது.

(7) வாடிக்கையாளர் ஒருவரின் இறப்பு காரணமாக ரூ. 450,000/- தொகையை அறவிட முடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்ய பணிப்பாளர் சபை தீர்மானித்தது. மேலும், 2025 மார்ச் 31 இலான வியாபார வருமதிகள் மீதியின் 10% இல் வியாபார வருமதிகளுக்கான விடுதொகையைப் பேண கம்பனி தீர்மானித்தது.

(8) நிதிக் கூற்றுக்கள், வெளியிடப்படுவதற்காக 2025 மே 30 இல் பணிப்பாளர் சபையால் அதிகாரம் அளிக்கப்பட்டன.

நீங்கள் செய்ய வேண்டியவை :

முகாமையின் பாவனைக்காக **வரையறுக்கப்பட்ட ஏசியா (தனியார்) கம்பனியின்** பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2025 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் பிற முற்றடக்க வருமானக் (முற்றடக்க வருமானக்) கூற்று. (14 புள்ளிகள்)

(b) 2025 மார்ச் 31 இல் நிதி நிலைக் கூற்று. (11 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி C முடிவு

செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
அறிவு (1)	விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல்	**வரைக (Draw)**	வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல்
		தொடர்புபடுத்துக (Relate)	தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல்
		கூறுக/ குறிப்பிடுக(State)	திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல்
		அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)	கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல்
		நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)	தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
முற்றடக்கம் (2)	யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும்	**ஏற்பிசைவு செய்க (Recognize)**	அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல்
		பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)	விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல்
		விளக்குக (Describe)	பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும்
		விபரிக்குக (Explain)	உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல்
		பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)	சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பிரயோகம் (3)	புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும்	**கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)**	வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல்
		வரைக (Graph)	வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல்
		மதிப்பிடுக (Assess)	பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல்
		தீர்க்குக (Solve)	கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல்
		தயாரிக்குக (Prepare)	குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல்
		எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)	உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல்
		கணிக்குக / கணிப்பிடுக (Calculate)	கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல்
		பிரயோகிக்குக (Apply)	நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல்

ஆற்றல் மட்டம்	விபரம்	செயல் வினைச்சொல்	வினைச்சொல் வரைவிலக்கணம்
பகுப்பாய்வு (4)	யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும்	**தொடர்பாடுக(Communicate)**	தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல்
		சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)	முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல்
		வேறுபடுத்துக (Contrast)	வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல்
		ஒப்பிடுக (Compare)	ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல்
		கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)	விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல்
		வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)	சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல்
		பகுப்பாய்வு செய்க (Analyze)	தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல்